மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து எல்லா வாரியங்களுக்கும் இந்த நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இன்னும் தொடர்ந்து வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 205, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

205—

விடுதி

***6660—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் 2-வது தொகுதி, மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமத்தில் சமூக நலத் துறை மூலம் விடுதி கட்டுவதற்கு கையகப்படுத்திய நிலம் எவ்வளவு?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் 2-வது தொகுதி மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமத்தில் செயல்படும் சமூக நலத் துறை விடுதி, சேலம் சத்தியா அம்மையார் ஆதரவற்ற குழந்தைகள் காப்பகத்திற்கு நில எடுப்புச் சட்டத்தின்கீழ் நிலம் ஏதும் கையகப்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. கார்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் 2-வது தொகுதி, மிட்டா அய்யம்பெருமாம்பட்டி கிராமத்தில், அந்தப் பகுதியிலே ஏழை விவசாய நிலங்கள் பல ஏக்கர் கணக்கிலே இன்றைய அரசாலே கையகப்படுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, அங்கே சமூக நலத் துறை மூலமாக பெண்கள் காப்பகம் ஒன்று செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்த விடுதியிலே உள்ள மாணவிகள் இன்றைக்கு 3-லிருந்து 4 கிலோ மீட்டர் அளவுக்கு நடந்து பள்ளிக்குச் செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகி இருக்கிறது. அதுபோல அந்தப் பகுதியிலே இன்றைக்குப் பெண்கள் கலைக் கல்லூரி கட்டுவதற்கு 30 ஏக்கருக்கு

மேலும், அதேபோல ஐ.டி.ஐ. கட்டுவதற்கு 20 ஏக்கருக்கு மேலும், அதுபோல தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பாக அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தனியான வீடுகள் கட்டுவதற்கு 267 ஏக்கருக்கு மேலான நிலங்களும் கையகப்படுத்தப்பட்டு இருக்கின்றன. இதிலே ஒரே கிராமத்திலே தொடர்ந்து பல அரசு திட்டங்களுக்காக இடங்களை கையகப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, வருங்காலங்களில் அரசு, குறிப்பிட்ட ஒரே இடத்திலே தொடர்ந்து இதுபோல இடங்களைக் கையகப்படுத்துவதைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கார்த்தி அவர்கள் சொல்கிற அந்த இடம் தமிழ்நாடு கல்வி அறக்கட்டளைக்குச் சொந்தமான 48 சென்ட் நிலத்தில் 1978 ஆம் ஆண்டு எடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. அதற்கு மாத வாடகையாக 9,200 ரூபாய் செலுத்தப்பட்டு, வாடகைக் கட்டடத்திலேதான் -- அறக்கட்டளைக்குத் தந்து -- சமூக நலத் துறையின் சார்பிலே நடத்தப்படுகிற காப்பகம் நடைபெறுகிறது. அறக்கட்டளையின் மூலமாக இன்றைக்கு இலவசமாகப் பெறுவதற்கு சமூக நலத் துறையினுடைய ஆணையர் கடுமையான முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார். அந்தக் கல்வி அறக்கட்டளையினுடைய தலைவர், சேலம் மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவர்; சமூக நலத் துறையினுடைய மாவட்ட அலுவலரும் அந்த அறக்கட்டளையில் இடம் பெற்றிருக்கிறார். எனவே, சமூக நலத் துறை ஆணையர் மூலமாக இலவசமாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மு. கார்த்தி.

முற்பகல் 10-35

திரு. மு. கார்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விடுதியிலே இன்றைக்குப் பெண்கள் குறிப்பாக இளம் வயது பெண்கள் மிக அதிகமாகத் தங்கி பயன்பெற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமாக ஒரு கட்டடம் கட்டிக்

2003 ஏப்ரல் 8]

கொடுக்க வேண்டும். அதேபோல அந்தப் பெண்கள், பள்ளிக்கு இன்றைக்கு 4 கி.மீ. தூரம் நடந்து சென்று படிக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஒரு பேருந்து வசதி வேண்டும் என்றும், வாகன வசதி வேண்டும் என்றும் நீண்ட நாட்களாகக் கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். அதிலும் நூற்றுக்கணக்கான பெண்கள், குழந்தைகள் எல்லாம் காலை 8 மணி அளவில் இருந்து அந்த ரோட்டில் நடந்துசென்று கொண்டிருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஒரு பேருந்து வசதியோ, அல்லது வாகன வசதியோ செய்து தரப்படுமா? அதுபோல நிரந்தரமாகப் படிப்பதற்கு ஒரு கட்டடத்தை இந்த நிதியாண்டில் அரசு கட்டுவதற்கு முன்வருமா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் குழந்தைகள் காப்பகத்தில் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை குழந்தைகள் அங்கேயே தங்கி படித்துக் கொண்டிருக்கிறார்கள். 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை படிக்கின்ற குழந்தைகள், வெளியிலே இருக்கின்ற பள்ளிகளுக்கு அனுப்பப்படுகின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல பேருந்து வசதி அந்தப் பிள்ளைகளுக்கு இல்லாத காரணத்தால் கடந்த ஆண்டு நம்முடைய தமிழக முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், குழந்தைகள் சில கி.மீ. தூரம் நடந்து செல்கிறார்கள் என்று தெரிந்ததற்குப் பிறகு 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை வெளியிலே சென்று படிக்கக்கூடிய பெண் குழந்தைகள் அனைவருக்கும் ஆதரவற்ற காப்பகங்களிலே படிக்கின்ற பிள்ளைகளுக்கு, ஆதிதிராவிட மாணவிகளுக்குத் தந்திருப்பதைப்போல இலவசமாக சைக்கிளை வழங்க உத்தரவிட்டு அதன் மூலம் சைக்கிளிலேயே குழந்தைகள் இப்போது வெளியில் சென்று படித்து வருகிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 206, திருமதி எஸ். கனிதா சம்பத், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.